**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 126/2026** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : அமைதி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **பூச்சித்தேவர்** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( all Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **13.03.2026**

---

**முதல் விசாரணை:**

நான் பொட்டுலுபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். அ.சா.1 எனது தம்பி முறை ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். அ.சா.1 கடந்த 2023ம் வருடம் எதிரிகள் மீது இருந்த மனகசப்பின் காரணமாக எதிரி மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 18.06.2023ம் தேதி போலிபட்டி கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் இருந்த நான் சொன்னதன் பேரில் அங்கு அ.சா.1 பைப் லைன் பஞ்சர் சரிசெய்து கொண்டிருந்தார் என்றும், அப்போது நான் அ.சா.1ன்னை மேற்படி ஊராட்சி அலுவலகத்திற்கு வர சொன்னேன் என்றும், அதன்படி அ.சா.1 1.30 மணிக்கு வந்தார் என்றும், அப்போது அங்கிருந்த எதிரிகள் இருவரும் அ.சா.1ன்னை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார்கள் என்றும், எதிரி காசி அ.சா.1ன்னை செருப்பு காலால் எத்தினார் என்றும், அருகில் இருந்த இருசக்கர வாகனத்தில்

இருந்த வயரை வைத்து அ.சா.1ன் முதுகில் அடித்தார் என்றும் எதிரிகள் இருவரும் சேர்த்து அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார் என்றும், அப்போது அருகில் இருந்த நான் மற்றும் மற்ற சாட்சிகள் எதிரிகளை விலக்கிவிட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாகவும், உண்மைக்கு புறம்பாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Amaithi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.